# முதல் இடைப்பருவத் தேர்வு – 2023

# வரலாறு

**12 - ஆம் வகுப்பு**

காலம் : 1.30 மணி | மதிப்பெண்கள் : 45

**I. சரியான விடையைத் தேர்வு செய்க.** **10X1 = 10**

1. காந்தியடிகள் தென்னாப்பிரிக்காவிலிருந்து எந்த ஆண்டு வந்தார்?
   அ) 1915 ஆ) 1916 இ) 1917 ஈ) 1918
2. “சுயராஜ்யம் எனது பிறப்புரிமை, அதை அடைந்தே தீருவேன்” எனக் கூறியவர்?
   அ) பால கங்காதர திலகர் ஆ) தாதாபாய் நௌரோஜி இ) சுபாஷ் சந்திரபோஸ் ஈ) பாரதியார்
3. பின்வருவனவற்றைப் பொருத்தி சரியான விடையைத் தேர்வு செய்க.
   அ) இந்திய பத்திரிக்கைச் சட்டம் 1910 – 1. சுயஆட்சி
   ஆ) விடிவெள்ளி கழகம் – 2. சார்ந்திருக்கும் நிலைக்கு எதிரான புரட்சி
   இ) சுயராஜ்யம் – 3. தேசிய அளவிலான செயல்பாடுகளை நசுக்கியது
   ஈ) சுதேசி – 4. கல்விக்கான தேசியக் கழகம்
   அ) அ–3. ஆ–1. இ–4. ஈ–2 ஆ) அ–1. ஆ–2. இ–3. ஈ–4
   இ) அ–3. ஆ–4. இ–1. ஈ–2 ஈ) அ–1. ஆ–2. இ–4. ஈ–3
4. தென்னிந்தியாவில் தன்னாட்சி இயக்கம் யாரால் துவக்கப்பட்டது?
   அ) திலகர் ஆ) அன்னிபெசன்ட் இ) பி.பி.வாடியா ஈ) எச்.எஸ். ஆல்காட்
5. 1916 – ஆம் ஆண்டு லக்னோ மாநாட்டின் முக்கியத்துவம் எது?
   அ) முஸ்லீம் லீக் எழுச்சி ஆ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக் தற்காலிக இணைவு
   இ) முஸ்லீம் லீக்கின் தனித் தொகுதி கோரிக்கையை காங்கிரஸ் ஏற்றுக் கொண்டது
   ஈ) காங்கிரஸ் மற்றும் முஸ்லீம் லீக்கின் கூட்டமர்வில் ஜின்னாவின் எதிர்மறை போக்கு
6. காந்தியடிகளின் அரசியல் குரு அ) திலகர் ஆ) கோகலே இ) W.C. பானர்ஜி ஈ) M.G. ரானடே
7. பின்வருவனவற்றுள் எது / எவை சரியானவை அல்ல.
   i) காந்தியடிகள் அகமதாபாத்தில் சபர்மதி ஆசிரமத்தை நிறுவினார் ii) வல்லபாய் படேல் ஒரு வழக்கறிஞர்
   iii) சைமன் குழுவினை முஸ்லீம் லீக் வரவேற்றது iv) இரண்டாவது வட்டமேசை மாநாட்டில் காந்தியடிகள் கலந்துகொண்டார்.
   அ) i ஆ) i மற்றும் iv இ) ii மற்றும் iii ஈ) iii மட்டும்
8. கீழ்காண்பவர்களில் 64 நாட்கள் உண்ணாவிரதத்திற்குப் பிறகு சிறையில் இறந்தவர்
   அ) புலின் தாஸ் ஆ) சச்சின் சன்யால் இ) ஜதீந்தரநாத் தாஸ் ஈ) பிரித்திவதேதார்
9. கொடுக்கப்பட்ட குறிப்புகளை கொண்டு சரியான கூற்றை தேர்ந்தெடுக்கவும்.
   i) “ Chittagong Armoury Raiders Reminiscencess” எனும் நூல் கல்பனாதத் என்பவரால் எழுதப்பட்டது
   ii) கல்பனாதத் தாய்நாட்டின் விடுதலைக்காக ஆயுதம் தாங்கி போராடினார்
   iii) கல்பனா தத் பேரரசருக்கு எதிராகப் போர் தொடுத்தார் எனக் குற்றஞ்சாட்டப்பட்டார்.
   அ) i மட்டும் ஆ) i மற்றும் ii இ) ii மற்றும் iii ஈ) அனைத்தும் சரி
10. முகலாயர் காலத்தில் அலுவலக மற்றும் நீதிமன்ற மொழியாக விளங்கியது எது?
    அ) உருது ஆ) இந்தி இ) மராத்தி ஈ) பாரசீகம்

**II குறுகிய விடையளிக்கவும்.(ஏதேனும் 4 வினாக்களுக்கு மட்டும்)** **4 x 2 = 8**

11. தேசியம் என்றால் என்ன?
12. அவுரி கலகம் குறித்து குறிப்பு வரைக.
13. அன்னிபெசன்ட் அம்மையாரால் வெளியிடப்பட்ட புத்தகம் மற்றும் வாராந்திரப் பத்திரிக்கையின் பெயர்களை எழுதுக.
14. இந்தியா வந்த வேல்ஸ் இளவரசர் எவ்வாறு வரவேற்கப்பட்டார்?
15. பகிஷ்கிரித் ஹிதகாரிணி சபா குறித்து எழுதுக.
16. இந்தியாவில் கம்யூனிஸ்ட் கட்சியை உருவாக்க கிரேட் பிரிட்டனால் அனுப்பப்பட்ட மூன்று ஆங்கில கம்யூனிசவாதிகளின் பெயர்களைக் குறிப்பிடுக.
17. தனித் தொகுதி முறையினை பற்றி எழுதுக.

**III சுருக்கமான விடையளிக்கவும்.(ஏதேனும் 4 வினாக்களுக்கு மட்டும்)** **4 x 3 = 12**

18. 1927 ஆம் ஆண்டு டெல்லியில் நடைபெற்ற முஸ்லீம் லீக் மாநாட்டின் முன்மொழிவுகள் யாவை?
19. சிட்டகாங் ஆயுதப் படைத் தாக்குதலை நடத்த சூரியாசென் எவ்வாறு திட்டமிட்டார்?
20. ஜாலியன் வாலாபாக் படுகொலை குறித்து குறிப்பு வரைக.
21. பூனா ஒப்பந்தத்தின் முக்கியத்துவம் யாது?
22. பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வினை உருவாக்கியதில் பத்திரிக்கைகளின் பங்கினை எழுதுக.
23. தன்னாட்சி இயக்கத்தின் இரட்டைக் குறிக்கோள்களை பற்றி விவாதிக்கவும்.
24. கலெக்டர் ஆஷ் ஏன் வாஞ்சிநாதனால் கொல்லப்பட்டார்?

**IV விரிவான விடையளிக்கவும்.(அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **3 x 5 = 15**

25. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் தேசிய உணர்வு தோன்ற காரணமான சமூகப் – பொருளாதாரக் காரணிகளை எழுதுக.
    (அல்லது) ஆ) லக்னோ ஒப்பந்தத்தின் முக்கிய அம்சங்களை முன்னிலைப்படுத்துக.
26. அ) பகத்சிங்கின் புரட்சிகர தேசிய வாதம் மற்றும் புரட்சிகர நடவடிக்கைகள் எவ்வாறு அவரைத் தூக்கு மேடைக்கு இட்டுச் சென்றது. (அல்லது)
    ஆ) தீவிர தேசியவாத காலப்பகுதியில் இருந்து ஏதேனும் ஐந்து நிகழ்ச்சிகளை காலக்கோட்டில் அமைத்திடுக.
27. அ) பிரிட்டிஷ் இந்தியாவில் வகுப்புவாதத்தின் தோற்றம் மற்றும் வளர்ச்சி குறித்து ஆய்வு செய்க.
    (அல்லது) ஆ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்கண்ட இடங்களை குறிக்கவும்.
    i. சௌரிசௌரா ii. கல்கத்தா iii. தண்டி iv. வேதாரண்யம் v. அமிர்தசரஸ்



www.Padasalai.Net

CamScanner